LIBRARY
26 SEP 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 7th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Sri Vedaranyeswaraswami temple Devasthanam

* 596 *Q.*—SRI K. ANBAZHAGAN : Will the Hon . the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received a petition, dated 26th December 1958, complaining about grave irregularities in the administration of Shri Vedaranyeswaraswami temple Devasthanam. Vedaranyam, Tanjore district; and .

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No Sir, but a petition has been received in the office of the Commissioner, Hindu Religious and Charitable Endowments;

(*b*) The matter is being inquired into.

SRI K. ANBAZHAGAN : ஏறத்தாழ 2 ஆண்டு காலமாக இந்த குறைகள் பற்றி பல கருத்துக்கள், பல விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. பல முறை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அது இன்னும் விசாரணையில் இருக்கிறது என்று சொன்னால் நிர்வாகத்தில் இருக்கும் ஊழலை எப்படி அரசாங்கம் நிவர்த்திக்கக் கருதுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஊழல் இருப்பதாக புகார் வந்தால் விதிகள்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்றது. இந்த தேவஸ்தானத்திற்கு முன்பே ஒரு ஸ்கீம் போடப்பட்டு, அந்த ஸ்கீம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்கு மேல் புகார் வந்தால் அதை விசாரிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு மேலே டெப்யூடி கமிஷனர் "ஜுடீஷியல் ப்ரொஸீடிங்ஸ்" எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவைகளெல்லாம் அறநிலைய பாதுகாப்பு இலாகாவினால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

SRI K. ANBAZHAGAN : இந்த நிர்வாகத்தைப் பற்றி எப்படிப் பட்ட, எந்த வகையான, எந்தத்தரமான புகார்கள் வந்திருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பற்றி விவரங்கள் கொடுப்பதற்கு இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. பொதுவாக நிர்வாகம் சரியாக நடைபெறவில்லையென்றும், திருப்திகரமாக இல்லையென்றும் கணக்குக்கூட சரியாக இல்லை என்றும் புகார் வந்திருக்கிறது. அது பற்றி அறநிலைய பாதுகாப்பு இலாகா பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

SRI A. VEDARATNAM : இந்தப் புகார்கள் யாரிடமிருந்து வந்திருக்கின்றன ? அந்தப் புகாரில் கண்டிருக்கிற விஷயங்கள் உண்மை தானா என்ற விஷயத்தை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? அப்படி அதில் கண்டிருக்கிற விஷயங்கள் உண்மை அல்ல என்றால், அம்மாதிரி புகார் செய்தவர்கள்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[7th April 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புகார் யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பதுபற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. அந்தப் புகாரில் எவ்வளவு தூரம் ஆதாரம் இருக்கிறது அல்லது ஆதாரம் இல்லை, ஓரளவுக்கு ஆதாரம் இருந்தால் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது ஆகியவைகளெல்லாம் அறநிலைய பாதுகாப்பு இலாகாவின் பரிசீலனையில் இருக்கின்றன என்று நான் சொன்னேன்.

SRI K. B. S. MANI : மேற்படி தேவஸ்தானத்திற்கு சொந்தமான சொத்துக்களை நிர்வகிக்க சிலோன் கவர்மெண்டிலிருந்து பண்டாரசன்னதி அனுப்பப்படுகிறார்கள். மேற்படி சொத்துக்கள் சிலோன் கவர்மெண்டுக்கு சொந்தம் என்று கூறப்படுகிறது. அப்படியிருந்தால் நம்முடைய நாட்டிற்கு அதை மாற்றிக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த தேவஸ்தானத்திற்கு சொந்தமாக சிலோன் நாட்டிலே சொத்து இருக்கலாம். ஆனால் இங்கு இருக்கிற சொத்துக்களை பொறுத்த மட்டில், இந்த தேவஸ்தானத்திற்கும் சிலோன் அரசாங்கத்திற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை.

SRI K. ANBAZHAGAN : இப்படிப்பட்ட பொது நலத்திற்கான நிர்வாகங்களில் குறைகள் இருக்கின்றன என்ற கருத்து வருகிற பொழுது, இந்த நிர்வாகத்தில் செல்வாக்குப் பெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்கள், உறுப்பினராக இருந்தால், அமைச்சர் அவர்களே தலையிட்டு குறைகளை நிவர்த்திக்க முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வித செல்வாக்கும், எவ்விததாட்சண்யமும் இந்த நிர்வாகம் சீராக அமைக்கப்படுவதில் குறுக்கிடாது.

MR. SPEAKER : அடுத்த இரண்டு கேள்விகளும் ஒரே விஷயத்தைப் பற்றியதால், அவைகளை ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

Electricity charges for agricultural purposes

*597 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்திற்கு விதித்திருக்கும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க மத்திய சர்க்காரிடமிருந்து ஆலோசனை ஏதாகிலும் வந்ததா ?

(ஆ) அப்படியானல் சென்னை சர்க்காரின் முடிவு என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The rate for supply of electricity for agricultural purposes as recently revised by the Electricity Board is 7 naye Paise per unit. The question of reducing this rate was recently considered by the Government in consultation with the Electricity Board and they have decided that no such reduction is possible.

* 598 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether this Government have received any amount from the Centre for reduction of rates of electricity charges for agricultural purposes?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI S. M. ANNAMALAI : மத்திய சர்க்காரிடமிருந்து என்னென்ன ஆலோசனைகள் இந்த சர்க்காருக்கு அனுப்பப்பட்டன ? அவைகளில் இந்த சர்க்கார் ஏற்றுக் கொண்ட ஆலோசனைகள் என்னென்ன ?